பக்கங்கள் 18 + 04

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 27 வெள்ளிக்கிழமை 10.05.2024 அதிர்வு 284

## பதுளையில் கோர விபத்து ஒருவர் பலி; நால்வர் காயம்



பதுளை -மஹியங்கனை பிரதான வீதியின் புவக்கொடமுல்ல கைலாகொட பகுதியில் இன்று இ.போ.ச. 04

# அரசியல் ஆதாயம் தேடுவோரின் விருப்பமே தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி

## ரணிலின் வெற்றியைத் தமிழரின் வெற்றியாக மாற்ற வேண்டும் என்று டக்ளஸ் வலியுறுத்து



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினைகளாக வைத்திருந்து அரசியல் ஆதாயம் தேடுவோரின் விருப்பமே தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி என்று விமர்சித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒப்பீட்டளவில் வல்லவராக தன்னை நிருபித்துள்ள ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியைத் தமிழ் மக்களின் வெற்றியாக மாற்றும் வகையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவால் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சமகால அரசியல் நிலவரங்கள், அரசால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள் மற்றும் வரவுள்ள தேர்தல் தொடர்பான முன்னெடுப்புக்கள் போன்றவை தொடர்பிலும், அவை சரியான முறையில் மக்களை சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்கு வழங்க வேண்டிய ஒத்துழைப்புக்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தும் வகையில் 03

# முஜிபுர் ரஹ்மான் எம்.பியாகச் சத்தியப்பிரமாணம்



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக மொஹமட் முஜிபுர் ரஹ்மான் இன்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போதே சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் முஜிபுர் ரஹ்மான்.

அதன்பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார். 04

Muhurtham Jewels

Visit our store and get special offers for this Akshaya Tritiya

Brand new collections, brand new offers



On May 10th Akshaya Tritiya, we are excited to offer a special gift to all our customers on every purchase*. Pre-book now!

A-30-2900 Markham Rd, Scarborough, Ontario, Canada M1X 1E6

www.muhurthamjewels.ca

more details CLICK

Jewelsmuhurtham | Muhurtham Jewels | (416) 321-7555

# சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா காலமானார்!

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம். உமர் மௌலானா இன்று காலமானார் .

மருதமுனையைச் சேர்ந்த உமர் மௌலானா திடீர் சுகவீனமுற்று கடந்த ஒரு சில தினங்களாக கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளையில் இன்று நண்பகல் 12 மணியளவில் காலமானார்.

உமர் மௌலானா 1984 இல் ஆசிரியராக நியமனம் பெற்று அதிபராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி வந்தார்.

2007 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் இணைந்து கொண்டார்.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் அதிபராக சீரிய சேவையாற்றியிருந்தார்.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் ஒன்பதாவது பணிப்பாளராக 20.01. 2023 சேவையில் இணைந்தார் .

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 60 வயதில் ஓய்வு பெறவிருந்தார்.



சம்மாந்துறை வலயத்தில் 15 மாதங்கள் கடமையாற்றி வந்த வேளையில் இன்று காலமானார்.

அன்னாருக்கு சம்மாந்துறை வலயக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார் – கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் அனைவரும் தமது அனுதாபங்களை தெரிவித்து வருகின்றார்கள்.






# யாழில் வீட்டில் கஞ்சா செடி வளர்த்தவர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவில் பத்திரகாளி கோயில் அருகாமையில் உள்ள வீட்டில் 8 அடி700 சென்றிமீற்றர் நீளமான கஞ்சா செடியை வளர்த்தவர் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் விசாந்த தலைமையிலான யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலில் அவர் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரும் இணைந்து தேடுதலில் ஈடுபட்டு வீட்டில் கஞ்சா செடி வளர்த்த 46 வயதான வீட்டின் உரிமையாளரைக் கைது செய்தனர்.




# உள நலப் பிரிவு கட்டடம் சம்மாந்துறையில் திறப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உள நல பிரிவுக்கான சமூக சுகாதார மையத்தின் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்து.

இந்த நிகழ்வு சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஐ.எம் கபீர் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி ஸகீலா இஸ்ஸதீன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா,கல்முனை பிராந்திய உள நல பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே நௌபல், மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.ஏ கபூர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை உள நல வைத்தியர் டாக்டர் கசுன் கடுவெல, சம்மாந்துறை பொலிஸ் நிலைய சிறு குற்றப்பிரிவு



பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எம் நௌபர், வைத்தியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நீண்ட காலமாக கைவிடப்பட்டிருந்த மீன் தொட்டியானது புனரமைக்கப்பட்டு அதனுள் நுளம்புக் குடம்பிகளை உண்ணக் கூடிய கப்பீஸ் மீன்கள் விடப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல் ஆதாயம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கலந்துரையாடல் அமைந் திருந்தது.

இதன்போது, தேர்தலில் கட்சியின் வாக்குப் பலத்தை அதிகரிப்புச் செய்ய வேண்டிய அவசியம் தொடர்பாக வலியுறுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலும் தெரிவித்ததாவது:-

“தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அவலங்களையும் அரசியல் கோஷங்களாகப் பயன்படுத்தி குறுகிய அரசியல் ஆதாயம் தேடும் தரப்புக்கள், தமது நலன்களுக்காகத் தமிழ் மக்களை இன்னுமொருமுறை பலிக்கடாவாக்க முனைகின்றார்கள்.

இவ்வாறான முட்டாள்தனமான முயற்சிகள் கடந்த காலங்களில் ஆயுதப் போராட்ட குழுக்களினாலும் மிதவாத தமிழ் தலைமைகளினாலும் பலமுறை முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், அவற்றினால் எமது மக்களுக்கு எந்தவித நன்மைகளும் கிடைக்கவில்லை. மாறாக மீள முடியாத பின்னடைவுகளையே ஏற்படுத்தியிருந்தன.

எனினும், நடைமுறை சாத்தியமான சிந்தனையோ, சரியான வேலைத்திட்டத்தை முன்வைத்து அதற்காக உழைக்கும் குணாம்சமோ இல்லாதவர்கள், எமது மக்களை உணர்ச்சியூட்டும் தோற்றுப்போன வழிமுறையையே மீண்டும் கையில் எடுத்து தம்மை அரசியலில் நிலைநிறுத்த முனைகின்றார்கள்.

ஆனால், ஈ.பி.டி.பி. ஆகிய நாங்கள், எமது மக்களுக்கு சரியான வழியை காட்டுகின்ற தனித்துவமான தரப்பு என்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருவதுடன் தேர்தல்களுக்கும் முகங் கொடுத்து வருகின்றோம்.

மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகள் முதல் அபிவிருத்தி உள்ளடங்கலான அரசியல் தீர்வு வரையிலான பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தீர்வுகளை முன்வைக்கக் கூடிய ஒரு கட்சியாக ஈ.பி.டி.பி. மட்டும்தான் இருக்கின்றது. இதில் அனைவரும் தெளிவாக இருப்பதும் அவசியம்.

கடந்த 34 வருடங்களாக பல்வேறு விடயங்களில் அவை நிரூபிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு நாம் கட்டி வளர்த்துள்ள தேசிய நல்லிணக்கமும் கணிசமான பங்களிப்பைச் செய்திருக்கின்றது.

எனவே, அடுத்த வரவுள்ள தேர்தல் என்பது தமிழ் மக்களை வெற்றியின் கதாநாயகர்களாக அடையாளப்படுத்தும் வகையில் எமது செயற்பாடுகளும் மக்களுக்கான தெளிவுபடுத்தல்களும் அமைய வேண்டும்.

அதன்மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை அடைவதற்கான வழியை பிரகாசமாக்க முடியும்.” - என்றார்.





# விடுவித்த காணிகளுக்குள் மக்கள் பிரவேசிப்பதற்கான வீதிகள் திறப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, ஒட்டகப்புலத்தில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 234.8 ஏக்கர் காணிகளுக்குள் பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான பாதைகள் திறக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர், மேலதிக மாவட்ட காணி செயலாளர் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஆகியோர் கடந்த 7 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட பகுதிக்குக் கள விஜயம் மேற்கொண்டு பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடியதற்கு அமைவாக, இரண்டு வீதிகள் திறக்கப்பட்டுள்ளன.

பொன்னாலை - பருத்தித்துறை கடற்கரை வீதியில் பலாலி வடக்கு பாடசாலை வீதியும், விமான நிலைய வீதியில் மருதடி சந்தியிலிருந்து பலாலி நோக்கிச் செல்லும் வீரப்பளை வீதியும் திறக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக விமான நிலைய வீதி ஊடாகவும், ஒட்டகப்புலம் பிரதான வீதியூடாகவும் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குச் செல்ல ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வசாவிளான் கிழக்கு(ஜே/244), வசாவிளான் மேற்கு (ஜே/245), பலாலி வடக்கு (ஜே/254), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி தெற்கு (ஜே/252) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குட்பட்ட 234.8 ஏக்கர் காணி அண்மையில் விடுவிக்கப்பட்டது.

இங்கு வசித்த 327 குடும்பங்கள் காணி உரிமை கோரி பதிவு செய்துள்ளதுடன், அவர்களில் 171 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தித் துப்பரவு செய்யும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில், ஏனைய மக்களும் தங்களின் காணிகளை அடையாளப்படுத்தி, துப்பரவுப் பணிகளை ஆரம்பிக்க மிக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டப்படுகின்றனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பதுளையில்....

பஸ்ஸும் ஓட்டோவும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளையிலிருந்து மஹியங்கனை நோக்கிப் பயணித்த ஓட்டோ, வீதியின் குறுக்கே பாய்ந்த நாய் ஒன்றைப் பாதுகாக்க முற்பட்டபோது, சரிபுரவில் இருந்து பதுளை நோக்கிப் பயணித்த இ.போ.ச. பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த 79 வயதுடைய வயோதிபரே உயிரிழந்துள்ளார் எனவும், ஓட்டோவில் பயணித்த பெண்கள் இருவர் உட்பட நால்வர் படுகாயமடைந்த நிலையில் பதுளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இ.போ.ச. பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பதுளை தலைமையகப் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

### முஜிபுர் ரஹ்மான்....

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த டயனா கமகேயின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி 2024ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அந்தக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக முஜிபுர் ரஹ்மான் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குக் கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்த முஜிபுர் ரஹ்மான், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக 2023 ஜனவரி 20ஆம் திகதி தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார்.



# பனை மரங்களின் மகத்துவத்தை எடுத்தியம்ப நுங்கு விழா மன்னாரில்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனை நிலையத்தின் அமுலாக்கத்துடனும் வன்னி மண் அறக்கட்டளை அனுசரணையுடனும் நுங்கு விழா மன்னாரில் நடைபெற்றது.

இவ்விழாவானது இன்று வெள்ளிக்கிழமை (10) மன்னார் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனை நிலையத்தின் முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இது தொடர்பாக உற்பத்தியாளர்கள் கருத்து தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தின் பாரம்பரியமான பனை மற்றும் தென்னை மரங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்முடையது.

இதிலும் அழிந்துபோகும் பனை மரங்களை யாவரும் அக்கறையுடன் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இவை தொடர்பான எமது மன்னார் மாவட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் காட்சிப்படுத்தலும் விற்பனை நிலையமும் மன்னார் மாவட்ட செயலகப் பகுதியில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பயன் அடையவும் முக்கிய இடத்தில் இதற்கான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆகவே பொது மக்களும் பாவனையாளர்களும் எமது உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்குடனும் , எமது மன்னார் வளத்தின் பனை மரங்களின் மகத்துவத்தை எடுத்தியம்பும் ஒரு நோக்குடனேயே இன்று (10) இந்த நுங்கு விழாவை நாங்கள் நடத்த தீர்மானித்தோம் என்று தெரிவித்தனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சட்டவாட்சியின் சீத்துவம்

டயானா கமகேயின் நாடாளுமன்ற உறுப்புரிமையை ரத்துச் செய்த உயர் நீதிமன்றத் தீர்ப்பின் விளைவுகள் பல தொடர் அதிர்வலைகளை கொண்டுவர வாய்ப்புகளை ஏற்படுத்தி இருப்பதாக அரசியல் சட்ட வட்டாரங்கள் கூறுகின்றன.

டயானா கமகே செயலாளராக இருந்த ஒரு கட்சியைத்தான் அச்சமயம் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய சஜித் பிரேமதாஸ அணியினர் தத்து எடுத்து, தங்களின் ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்சியாக்கிக் கொண்டார்கள்.

இலங்கைப் பிரஜா உரிமை இல்லாதவர் எப்படி ஓர் அரசியல் கட்சியின் செயலாளர் ஆக இருந்திருக்க முடியும்? அவர் செயலாளராக இருந்த கட்சி சட்ட ரீதியில் செல்லுபடியானதா? ஆகவே அக்கட்சியை சஜித் தரப்பு கையகப்படுத்தித் தங்கள் கட்சியாக செயல்படுத்துவது சட்ட ரீதியாக வலுவற்றதல்லவா? - என்றெல்லாம் அரசு தரப்பில் இருந்து சில கூச்சல்கள் இப்போது எழுகின்றன.

அவையெல்லாம் அர்த்தமற்றவை. சட்ட வலிமையே இல்லாத வாதங்கள் என்று சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

நாட்டின் பிரஜை அல்லாத ஒருவர் அரசியல் கட்சியை ஆரம்பிக்கக் கூடாது, ஆரம்பிக்க முடியாது என்று இந்த நாட்டில் சட்டம் ஏதுமில்லை, சட்டத்த தடையேதும் விதிக்கப்படவும் இல்லை என்பதை முன்னாள் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய சுட்டிக் காட்டுகின்றார். விடயம் அறிந்த சட்ட வட்டாரங்களும் அதனை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

ஆகவே டயானா கமகேயின் கட்டுப்பாட்டில் இருந்த கட்சியை சஜித் தரப்பினர் தம் வசம் கையகப்படுத்தி தங்கள் கட்சியாகக் கொண்டு நடத்துவதற்கு இப்போது உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு எந்த வகையிலும் சட்ட ரீதியான பாதிப்பைத் தராது என்பது தெளிவு.

அத்தோடு, அக்கட்சியின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட ரஞ்சித் மத்துமபண்டாரவே கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பு மனுக்களில் பொதுச் செயலாளர் என்ற முறையில் ஒப்பமிட்டுள்ளார். ஆகையினால் இந்தத் தீர்ப்பு ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்களை வேறு விதத்தில் பாதிக்க இடமில்லை என்பது கண்கூடு.

இந்த நாடாளுமன்றத்தில் இப்படி நீதிமன்ற வழக்கு மூலம் பதவியை இழந்த இரண்டாவது உறுப்பினர் டயானா கமகே. இந்தப் போக்கு இந்த நாடாளுமன்றத்தில் இன்னும் தொடருமா என்பதுதான் இப்போது சட்ட வட்டாரங்களில் எழுப்பப்படும் கேள்வியாகும்.

ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அரசுப் பக்கம் தாவிய இராஜாங்க அமைச்ச டயானா கமகே பதவி இழந்துள்ளார்.

அதேபோன்ற வழக்குகள் அரசு பக்கம் அமைச்சர்களாகச் சேர்ந்த ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார போன்றோருக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தீர்ப்புக்காகத் தவம் கிடக்கின்றன. இப்படி உயர்நீதிமன்றத்தில் தவம் கிடப்பதாக நாம் குறிப்பிடுவதற்கு நியாயமான காரணங்கள் உண்டு.

இவ்வாறு ஒருவர் நாடாளுமன்றத்தில் கட்சி மாறிக் குத்துக் கரணம் அடித்த காரணத்துக்காகக் கட்சியால் வெளியேற்றப்பட்டால், அவர் எம்.பி. பதவியில் தொடரலாமா என்பது தொடர்பான வழக்கு வரும்போது அச்சர்ச்சைக்கு மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது அரசமைப்பு ஏற்பாடு. தம்மைக் கட்சியிலிருந்து வெளியேற்றியமைக்கு எதிராக அந்த உறுப்பினர் வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஒரு மாதமும், உயர்நீதிமன்றம் விசாரித்துத் தீர்ப்பு வழங்க இரண்டு மாதங்களும் என்பதுதான் காலக்கெடு. சட்ட ரீதியான அவகாசம்.

ஹரினும் மனுஷவும் கட்சி மாறி இரண்டு வருடங்களுக்கு மேலாகி விட்டன. அது தொடர்பான வழக்குத் தாக்கலாகி ஒரு வருடத்தின் பின்னர்தான் நீதிமன்றம் அது பற்றி விசாரிக்கவே தொடங்கியது. விசாரணை முடிவடைந்து நான்கு மாதங்களாகிவிட்டன. தீர்ப்பு இன்னும் வரவில்லை. தீர்ப்புக்காகக் காத்துக் கிடக்கும் நிலைமை. அது எப்போது வரும் என்பதும் தெளிவில்லை. அந்த வழக்கை விசாரித்த மூன்று நீதியரசர்களில் முதன்மை நீதியரசர் வரும் ஓகஸ்டில் ஓய்வு பெறுகின்றார். வழமை போல ஓய்வுக்கு முதல் நாள் தனது தீர்ப்புக்குக் காத்திருக்கும் வழக்குத் தொடர்பில், ஒரு வரியில் அல்லது ஒரு வாசகத்தில் அவர் தீர்ப்பை வழங்கி விட்டுப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதுதான் வழமையாக நடக்கும் சங்கதி. இதுதான் இலங்கையில் சட்டவாட்சியின் சீத்துவமும் கூட.




# பெரியபாலம் கிராமிய சுகாதார நிலையம் இன்று திறந்து வைப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பெரியபாலம் கிராமிய சுகாதார நிலையம் இன்று (10) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# வனராஜா தோட்டத்தில் இறந்த சிறுத்தை மீட்பு!

(தலவாக்கலை)

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வனராஜா தோட்டத்தில் நேற்று முன்தினம் (08) காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சிறுத்தையின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

இரண்டு சிறுத்தைகளுக்கு இடையே ஏற்பட்ட மோதலால் இந்த சிறுத்தையில் உடலில் காயங்கள் ஏற்பட்டு உயிரிழந்திருக்கலாம் என வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பிரதேசவாசிகள் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்ததை அடுத்து சிறுத்தை மீட்கப்பட்டுள்ளது.

சிறுத்தையின் சடலத்தை மேலதிக விசாரணைகளுக்காக நல்லதண்ணி வனஜீவராசிகள் காரியாலயத்தில் ஒப்படைக்க ஹட்டன் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





# யானை - மனித மோதல் தொடர்பில் ஆதிவாசிகளுக்கு விளக்கமளிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆதிவாசிகள் அடிக்கடி காட்டு யானை மோதலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மனித – காட்டு யானை மோதலில் இருந்து ஆதிவாசி சமூகத்தை பாதுகாக்கும் நோக்கிலும் அவர்களுக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளின் ஊடாக பயிற்சி வழங்கும் முயற்சியில் ஹெல்ப் ஸ்ரீ லங்கா அமைப்பு அம்பாறை மாவட்டத்தில் செயலமர்வுகளை நடத்தி வருகின்றது.

மதுருஓயா தேசிய பூங்காவில் சுமார் 350 முதல் 400 யானைகள் உள்ளன. மாதுரு ஓயா பெரிய குளத்தில் நன்னீரின் பெரும் பகுதி யானைகள் நீர் அருந்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மஹாவலி சிஸ்டம் சி பிரதான திட்ட வரைபில் வரையறுக்கப்பட்ட யானை வழித்தடங்களில் திசை மாறி வழியை இழந்த யானைகள் அடிக்கடி அருகில் உள்ள வஸ்கமுவ தேசிய பூங்காவுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

யானைகள் சுதந்திரமாக திரியும் எலெகொடலீய வழித்தடம் இப்போது மனித வாழ்விடங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது .

இந்தப் பகுதிகளில் உள்ள கிராமங்கள் அடிக்கடி மனித யானை மோதலுக்கு உள்ளாகின்றன. இவ்வாறாக இந்தப் பிரதேசத்தில் தெஹியத்தகண்டிய என்ற கிராமத்தில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது.

காட்டு யானைகள் சுதந்திரமாக வாழும் இடங்கள் மனிதர்களால் சேனைப்பயிர்ச் செய்கை என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்படுவதாலும், நகரமயமாக்கல் போன்ற குடியேற்றத்துக்காக இயற்கை காடுகள் கண்டபடி அழிக்கப்படுவதாலும் யானைகளின் போக்குவரத்து வழிப்பாதை தடைப்பட்டது மனித – யானை மோதலுக்குப் பிரதான காரணமாக இது அமைந்துள்ளது என்று ஆதிவாசிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.



# முசல்பிட்டி சமூர்த்திப் பயனாளிக்கு விஷேட வீடு கையளிக்கும் நிகழ்வு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் ஏத் தாளை சமூர்த்தி வங்கியின் எல்லைக்கு உட்பட்ட முசல்பிட்டி கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த சண்முக லிங்கம் விஷ்வநாதன் எனும் சமூர்த்திப் பயனாளிக்கு 'ரன் விமன' விசேட வீடமைப்பு வேலைத் திட்டதுக்கு அமைய ஏழு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (9) கற்பிட்டி பிரதேச செயலாளர் ஜே.எம். விமல இந்திக ஜயசிங்க தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கற்பிட்டி சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் தினூஷா மதுரங்கி பெர்ணான்டோ, கற்பிட்டி சமுர்த்தி வங்கிச் சங்க சமூக அபிவிருத்தி உதவியாளர் டப்லியூ. அன்டன் சமந்த பெர்ணான்டோ, முசல்பிட்டி சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நிஸ்மி, திகழி



சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜே.எம். ஆசீர் ஆகி யோருடன் முசல்பிட்டி பிரதேச மக்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




# தமிழரின் தற்காப்பு கலையை அழியவிடாமல் பாதுகாத்த பெருமை யாழ். மண்ணுக்குரியது

## உலக சிலம்பச் சங்க தலைவர் சுதாகரன் பெருமிதம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலகில் தமிழுக்கு அகராதியை கொடுத்த இடம் யாழ்ப்பாணம் என்பதில் நான் பெருமை அடைகின்றேன் என்று உலக சிலம்பச் சங்கத்தின் தலைவர் முனைவர் சுதாகரன் யாழ்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் றில்கோ தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சிலம்பம் போட்டியை முதல்முறையாக 5 நாடுகளின் பங்கு பற்றுதலுடன் யாழ்ப்பாணத்தில் நடத்தக் கிடைத்தமையையிட்டு நான் மகிழ்சி யடைகின்றேன்.

யாழ்ப்பாணம் தமிழக்கு அகராதி கொடுத்த இடம். இங்கு பேசுகின்ற தமிழ் தூய்மையான செழுமையான தமிழ். அதையிட்டு நான் பெருமை அடைகிறேன்.

அவ்வாறான ஒரு இடத்தில் உலக சிலம்பம் சங்கத்தின் உறுப்பினர்களும் வெளிநாட்டு மாணவர்களும் இணைந்து எமது பாரம்பரிய கலைப் போட்டியை எதிர்காலத்தில் நிகழ்த்தவுள்ளோம்.

குறித்த போட்டியில் பங்குபற்றும் மாணவர்களுக்கு சர்வதேச தரச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது.-என்றார்.





# தனியார் நிலங்கள் அபகரிப்பா...?

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

தனியார் நிலங்களை அபகரித்து மக்களின் குடியேற்றம் விவசாய பூமிகளை இல்லாமல் ஆக்கி துரத்தியடிக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட முத்து நகர் பகுதியில் விவசாய காணிகளை அபகரித்து அந்நிய நாடுகளுக்கு விற்க வேண்டாம் எனக் கோரி கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று (28.04.2024) இடம்பெற்றது.

1972 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சி காலத்தில் அப்போதைய பிரதியமைச்சராக செயற்பட்ட மறைந்த மர்ஹூம் ஏ .எல். அப்துல் மஜீத், முத்து நகர் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது 1984 இல் இலங்கை துறை முக அதிகார சபைக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியின் போது துறை முக அமைச்சராக இருந்த லலித் அதுலத் முதலியால் குறித்த முத்து நகர் காணி துறைமுக அதிகார சபைக்கு சொந்தமானது என்று வர்த்தமாணி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

ஆனால் அந்த மக்களுக்கு இதுவரை காணி உரித்துப் பத்திரப் வழங்கப்படவில்லை எனவும் துறைமுக அதிகார சபையினர் தங்களை தொடர்ந்தும் அச்சுறுத்துவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். 1972 ஆம் ஆண்டில் இருந்து நெற்செய்கை உள்ளிட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கை விவசாயங்களை மேற்கொண்டிருந்து தற்போது வரை விவசாயத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்கள்.

தற்போது இங்கு மூன்று விவசாய குளங்கள் காணப்படுகின்றன. சுமார் 788 ஏக்கர் விவசாய நிலங்களும் காணப்படுகின்றன. 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்த மக்கள் தங்களின் அன்றாட ஜீவனோபாயமாக விவசாயத்தை நம்பியே வாழ்கின்ற னர் . துறைமுக அதிகார சபையினர் எங்கள் காணியை பெற்று இந்தியாவுக்கு தாரை வார்க்கப் பார்க்கின்றனர். இதனை அரசு நிறுத்தி ஜனாதிபதி எங்களுக்கான காணிகளுக்கான உரித்துப் படிவங்களை வழங்க வேண்டும். விவசாய குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.


விற்காதே விற்காதே காணிகளை விற்காதே, விவசாய நிலங்களை மீட்டுத் தா, நாட்டின் புதுகெலும்பு விவசாயம், துறைமுக அதிகார சபையே விவசாய காணிகளை அபகரிக்காதே, 1972 இல் இருந்து விவசாய அநாதைகளாக நிர்க்கதியாக இருக்கிறோம் காணி உரித்து வடிவங்களை வழங்கு போன்ற வாசகங்களை உள்ளடக்கிய வகையில் பதாகைகளை ஏந்தியவாறு குறித்த முத்து நகர் விவசாய பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


இதில் சுமார் நூற்றுக் கணக்கான விவசாயிகள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இப்படியாக மக்களின் விவசாய பூமிகள் துறைமுக அதிகார சபையினரால் பறிக்கப்பட்டு இந்தியாவுக்கு நீண்ட காலக் குத்தகைக்காக வழங்கப்படவுள்ளன என அறிந்து மக்கள் போராட்டம் வெடிக்கத் தொடங் கியுள்ளது. இந்தப் பகுதியில் தகரவெட்டுவான் விவசாய குளம் இருந்த போதிலும் அதனை கமநல அபிவிருத்தி திணைக்களம் ஊடாக குளம் புனரமைப்பு செய்யப்படவிருந்த போதிலும் இலங்கை துறை முக அதிகார சபையினர் அதனைத் தடுத்து நிறுத்தினர். இதனால் பல ஏக்கர் வயல் நிலங்கள் செய்கை பண்ண முடியாது பல இடர்களை அந்தப் பகுதி விவசாயிகள் எதிர் கொண்டனர்.

இது தொடர்பில் அப் பகுதி குடும்ப பெண் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

“இலங்கை துறை முக அதிகார சபையினர் கடந்த மூன்று வருட காலமாக எங்களது விவசாய குடியிருப்பு

தொடர்ச்சி▼







# தனியார் நிலங்கள் அபகரிப்பா...?

தொடர்ச்சி▲

காணிகளுக்குள் புகுந்து எந்த வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது அச்சுறுத்துகின்றனர். புதிய கட்டிடங்களோ விவசாய செய்கையின் போது உழுதுதல் நடவடிக்கையோ எதுவுமே செய்ய விடாது தடுத்து நிறுத்துகின்றனர். 2010, 2013, 2023 களில் ஒரு கோடிக்கும் அதிகமான நிதி தகரவெட்டுவான் குள அபிவிருத்திக்காக வந்தபோது குறித்த திட்டத்தை செய்ய விடாது துறை முக அதிகார சபையினர் தடுத்து நிறுத்தினர் இதனால் விவசாயிகளாகிய நாங்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளோம். எங்களது காணி எங்களுக்கு வேண்டும்" – என்றார்.

மக்கள் காணிகளைச் சூரையாடி உள்ளக வளங் களை அந்நிய சக்திகளுக்கு கொடுப்பதால் அந்தப் பகுதிக் குடியேற்றங்கள் பாதிக்கப்படக் கூடும். அப் பகுதி மக்களைத் துரத்துவதாக இருந்தால் அதை விடவும் சாதகமான காணிகள் விவசாய நிலங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் கோரிக் கையாகும்.

மேலும் விவசாய நிலங்களை பந்தாடும் துறைமுக அதிகார சபை தொடர்பில் அந்தப் பகுதி வயோதிபர் ஒருவர் இவ்வாறு தெரிவித்தார்.

" 1972 ஆம் ஆண்டில் இருந்து அப்போதைய பிரதமராக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்தில் இருந்து இங்கு வாழ்கிறோம். எங்களுக்கு காணிகளுக்கான உறுதிப் பத்திரங்கள் கூட வழங்கப் படவில்லை விவசாயத்தை நம்பியே வாழ்கிறோம். இதனைக் கொண்டே குடும்பத்தின் வயிற்றுப் பசியை போக்குகிறோம். ஜனாதிபதி ரணிலுக்கு மாலை அணிவித்து கைகொடுத்தவன் நான். எனவே எங்க ளுக்கு உறுதிப் பத்திரங்களை விரைவாகப் பெற்றுத் தாருங்கள். துறைமுக அதிகார சபையினர் இங்கு வந்து அடிக்கடி அச்சுறுத்துகின்றனர். இதற்கு நாங்கள் அச்சப்படப் போவதில்லை. எங்கள் உரிமைகளை பெற்றுத் தாருங்கள்" என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

வட கிழக்கு மாகூணங்களில் நில அபகரிப்பு என்ற நிலையில் அதிகமாக சிறுபான்மை சமூகமே பாதிக்கப்பட்டுள்ளது. அரசுடன் இருக்கும் அரசியல் கட்சிகள் மக்கள் பிரதிநிதிகள் உட்பட எதிர் கட்சி பிரதிநிதிகள் மக்களின் காணி உரிமைகள் தொடர்பில் தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும் நிம்மதியாக சுதந்திரமாக வாழ வழிசமைத்துக் கொடுக்க வேண்டும். தேர்தல் காலங்களில் மாத்திரம் கிராம மக்களை சந்திப்பதன்று. அடிக்கடியாக மக்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து நாடாளுமன்றில் பேசுவதுடன் நிரந்தர தீர்வொன்றைப் பெற முயற்சிக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகக் காணப்படுகிறது.

முத்து நகர் மக்களின் நீண்ட காலக் கனவை, அவர்கள் வெற்றி கொள்ள வேண்டும். இது தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முஸ்லிம் பிரிவுக்கான அமைப்பாளர் ராசிக் றியாஸ்தீன் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

"ஏழை விவசாயிகள் வாழும் முத்து நகர் பகுதியை அந்நிய சக்திகளுக்கு வழங்கி ஏப்பமிட வேண்டாம். மின்சாரத்தை உற்பத்தி செய்து அதைச் சாப்பிட முடியாது. இந்த மக்களுக்கான காணி உரிமம் தொடர்பில் ஜனாதிபதி செயலகம், காணி அமைச்சு, மாவட்ட செய லகம், பிரதேச செயலகம் என பல கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் வழங்கப்பட்ட போதிலும் சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை. விவசாயிகள் இல்லை என்றால் உணவு இல்லை. நீங்கள் சாப்பிடும் போது விவசாயிகளின் ஞாபகம் உங்களுக்கு வரும். ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர்கள். காணிகளுக்கான உரித்துப் பத்திரங்களை வழங்குங்கள் என ஜனாதிபதியை கோருகிறேன்."– என்றார்.

மக்களுடைய உரிமைகளை அவர்களுக்கு அரசு வழங்க வேண்டும். நில அபகரிப்புக்களை மேற்கொள் ளாது துறை முக அதிகார சபை இதனை விடுவித்து உரித்துப் பத்திரங்களை வழங்க வேண்டும் எனவும் அம் மக்கள் எதிர்பார்த்து காத்து நிற்கின்றனர்.






## குருதியில் நனைந்த ஈழப் படுகொலையை வரலாற்றாக்கிய



### பிரான்ஸிஸ் ஹாரிசனின் நூலான

# ஈழம்

# சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்

■ நவீனன்

**(உலகம் வாழ் தமிழர்களின் கவனத்தை பெருமளவுக்கு ஈர்த்துள்ள பிரான்ஸிஸ் ஹாரிசனின் (Frances Harrison) 'ஈழம்: சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்' நூலானது சாட்சியங்களற்ற போர் என வர்ணிக்கப்பட்ட ஈழ இனப் படுகொலையின் கொடூரமான சாட்சியங்கள் பலவற்றை வரலாற்றுப் பதிவாக முதல் தடவையாக வெளியே 2012 ஆம் ஆண்டு கொண்டு வந்தது.)**

**(முட்கம்பி அடித்த வேலிக்குள் செம்மறி ஆடுகளைப் போல் எங்களை அடைத்தார்கள். எங்களின் உடைகளை எல்லாம் கழற்ற வைத்தார்கள். வயது, பால் வித்தியாசம் இன்றி எல்லோரும், பச்சைக் குழந்தைகள் கூடத் தங்கள் உடைகளைக் களைய வேண்டும். காவல் தளத்துக்குப் பின்னால் அவளை வன்புணர்வுக்கு ஆளாக்கி இருக்க வேண்டும். காவல் தளத்துக்குப் பின்னால் அந்தச் சிறுமி அரை நிர்வாணமாக நின்று அழுவதைக் கண்டேன். "ஈழம்: சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்" நூலில் பல உண்மைகளை பிரான்ஸிஸ் ஹாரிசனின் பகிர்ந்துள்ளார்)**

2009 இல் இலங்கையில் இறுதி யுத்தம் முடிவடைந்த போது என்ன நடந்தது என்பதை தமிழர்கள் அல்லாதவர்களுக்கு கூறவே இந்த புத்தகத்தை எழுதினேன் என்றும், தமிழ் மக்கள் படும் கொடுமையை உலகில் பல தமிழர்கள் கூட அறிந்திருக்கவில்லை என்று பிரான்சிஸ் ஹாரிசன் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

**'பான் கி-மூனின் ருவாண்டா'**

பிரான்சிஸ் ஹாரிசன் இந்த நூலில் எழுதிய முன்னுரையில், 2009 இல் இலங்கையில் யுத்தம் முடிவடைந்த போது என்ன நடந்தது என்பதை தமிழர்கள் அல்லாதவர்களுக்கு கூறவே இந்த புத்தகத்தை எழுதினேன். தமிழ் மக்கள் படும் கொடுமையை பல தமிழர்கள் அறிந்திருக்கவில்லை என்பதை பின்னர் தான் அறிந்தேன். தாங்க முடியாத அழிவின் அளவு மற்றும் அது எவ்வளவு விரைவாக நடந்தது என்பதைக் கருத்தில் கொண்டு, இது மிக மோசமான பேரழிவு என்பதில் சந்தேகம் இல்லை. நான் இந்த நூலை (ஆங்கிலத்தில்) எழுதி வெளியிட்ட பிறகு, 2012 நவம்பரில் ஐ.நா. பொதுச் சபை அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

ஈழப் போரின் போது ஐ.நாவின் நடத்தை குறித்த உள்ளக விசாரணை அறிக்கை அது. ஐ.நா. சபை பற்றி இந்த புத்தகத்தில் நான் எழுதியிருப்பதை அந்த அறிக்கை உறுதிப்படுத்துகிறது.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த சில வருடங்களில் ஐ.நா. ஒரு 'பெரிய தவறை' செய்துள்ளதாகவும், சிலர் அதை 'பான் கி-மூனின் ருவாண்டா' என்றும் வர்ணித்ததாகவும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

போரின் இறுதி ஐந்து மாதங்களில் மட்டும் 70,000 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டதாக ஐ.நாவின் முதல் அறிக்கை இதுவாகும். இவையெல்லாம் எப்படி நமக்குத் தெரியாமல் போனது? பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தின் பின்னணியில் சர்வதேச ஆதரவுடன் இலங்கை அரசு இந்தப் போரை எவ்வாறு நடத்தியது என்பதை எதிர்காலத்தில் கல்வியாளர்களும் ஆய்வாளர்களும் கண்டுபிடிப்பார்கள் என்று அவர் எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

**சாட்சியங்களற்ற போரான ஈழம்**

சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் அவையும் எவ்வளவு கவனம் எடுத்து மறைக்க முயன்றாலும் மறுபடியும் மறுபடியும் கொலைக்கள ஆவணங்களும், சாட்சியங்களும், வாக்குமூலங்களும் இன்று பரவலாகக் கிடைக்கின்றன. பிபிசியின் செய்தியாளராக இலங்கையில் பணிபுரிந்த பிரான்ஸிஸ் ஹாரிசனின் (Frances Harrison) இந்த நூல், சான்றுகளையும் தகவல்களையும் உயிர் தப்பிப் பிழைத்தோரின் அவல அனுபவங்களையும் புரிந்துணர்வுடனும் உணர்வுத் தோழமையுடனும் ஒரு சேரத்தருகிறது. பிரான்ஸிஸ் ஹாரிசனின் ஆங்கில நூலை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார் என்.கே. மகாலிங்கம்.

பல ஆண்டுகள் பிபிசியின் வெளியுலக செய்தியாளராக ஆசியாவில் பணியாற்றிய அவர்,

தொடர்ச்சி▼




## பிரான்ஸிஸ் ஹாரிசனின் நூலான

# ஈழம்

# சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்

தொடர்ச்சி▲

2000 முதல் 2004 வரை பிபிசியின் இலங்கைச் செய்தியாளராகச் செயல்பட்டார். 1966 இல் பிறந்த பிரான்ஸிஸ் ஹாரிசன் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கல்லூரியிலும் ‘ஸ்கூல் ஆப் ஓரியண்டல் அண்டு ஆப்பிரிக்கன் ஸ்டடீ’ஸிலும் லண்டன் இம்பீரியல் கல்லூரியிலும் கல்வி கற்றவர். அத்துடன் ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் நிறுவனத்திலும் பணிபுரிந்திருக்கிறார். இவருடைய கணவர் ஈரானியர். ஒரு மகன் இருக்கிறார்.

இது தமிழ் தேசியம் அல்லது இன மோதல்களின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றிய வரலாற்று ஆய்வுக் கட்டுரை அல்ல. இலங்கையில் போர் மற்றும் மோதல்கள் இன்னும் முடிவடையவில்லை என்பதை நாம் உணர வேண்டியது அவசியம்.

நீதி, நியாயம் மற்றும் நல்வாழ்வுக்கான ஐநா பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்தை திருப்திப்படுத்த அறிக்கைகள், ஆவணப்படங்கள் மற்றும் புத்தகங்கள் மட்டும் போதாது. போரில் உயிர் பிழைத்தவர்களுக்கும் தங்கள் கதைகளை என்னுடன் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எனது முதன்மையான நன்றிகள் என தனது முன்னுரையில் போரின் பின்னணியை விளக்க முயன்றுள்ளார்.

டிசெம்பர் 2012 இல் பிரான்ஸிஸ் ஹாரிசன் தமிழ் பதிப்புக்கு எழுதிய முன்னுரையில் மேலும், இத்தகைய போர்ச் சூழலில் சர்வதேச சட்டங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இந்த அவலத்தை வெளிப்படுத்தத் தவறிய ஊடகங்கள் பற்றியும் அவர்கள் ஆய்வு செய்து எழுத வேண்டும். இலங்கையைப் பற்றி அதிகம் தெரியாத வாசகர்களை மனதில் வைத்து இந்தப் புத்தகம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. அத்தகைய வாசகர்களுக்கு இலங்கை என்றால் தேநீர் மற்றும் கிரிக்கெட் விளையாட்டு மற்றும் கடற்கரைகள் நினைவுக்கு வருகின்றது என்றும் சாடியுள்ளார்.

### குருதியில் நனைந்த ஈழப்படுகொலை

குருதியில் நனைந்த ஈழப்படுகொலை சாட்சியங்களை,ஓர் ஊடகவியலாளரின் சாட்சியமாக காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்டுள்ள பிரான்ஸிஸ் ஹாரிசனின் “ஈழம்: சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்” நூல் சர்வதேச நீதியில் தமிழர்களின் கவனத்தையும் பெருமளவுக்கு ஈர்த்துள்ளது என்றும் கூறலாம்.

ஓர் ஊடகவியலாளரின் சாட்சியமான பிரான்ஸிஸ் ஹாரிசன், குருதியில் நனைந்த ஈழப்படுகொலை சாட்சியங்கள் நூலில் பகிர்ந்த சில பதிவுகள்:

அதிபயங்கரமான படுகொலைகள் நடந்த அந்தப் பொன்னிற மணல் பிரதேசத்திலிருந்து தப்பி வருகிறார் லோகீசன். ஆறு அடி உயரம். மழிக்கப்படாத தாடி. நீண்ட குழம்பிய தலைமுடி. இருபத்தேழு வயது. தன் தந்தையை ஒரு குழந்தையைப் போல் தூக்கி வருகிறார். தன் தலைக்கு மேலாகப் பறந்து கொண்டிருக்கும் துப்பாக்கிக் குண்டுகளை அவர் கவனிக்கவில்லை.

‘சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்’ நூலின் இரண்டாம் பதிப்பில், ஆங்கிலப் பதிப்பிலும் முதல் தமிழ் பதிப்பிலும் இடம்பெறாத இரண்டு பகுதிகள் ‘மருத்துவ ஊர்தி ஓட்டுநர்’, ‘போராளியின் மனைவி’ புதிய பதிப்பும் சேர்க்கப்பட்டுள்ளன. சாட்சியமற்ற போராக இதுவரை கருதப்பட்ட ஈழத் தமிழரின் 2009 முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்குப் பல விரிவான சாட்சியங்களை முதல் முறையாக இந்த நூல் முன்வைத்துள்ளது.

காலடியில் கிடக்கும் செத்த உடல்களைக் கவனிக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்கு இப்போது தண்ணீர்த் தாகம். பயங்கரமான தண்ணீர்த் தாகம். அது மட்டுந்தான் அவருக்கு இப்போது நினைவிலிருக்கிறது. அது 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம். கொடுமையான வெயில் எரிக்கும் பின் மதியம்.

### முள்ளிவாய்க்கால் இறுதி நாள்கள்

இலங்கையில் முன்னர் பிபிசி செய்தியாளராக பணியாற்றிய பிரான்ஸிஸ் ஹாரிசன் முள்ளிவாய்க்காலில் இறுதிநாள்வரை துன்புற்றோரின் அவல அனுபவங்களை அக்கறையுடனும் புரிதலுடனும் துல்லியமாக பதிவு செய்துள்ளார்.

மேலும் அப்பதிவில், பல்லாயிரக்கணக்கான மக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதற்காக ஒரு சிறிய கடற்கரைப் பகுதிக்குத் தங்களுடன் கூட்டிச் சென்றார்கள் என்ற குற்றச்சாட்டும் புலிகள் மீது சுமத்தப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டை லோகீசன் மறுத்தார். எங்குமே மக்களால் ஓடித் தப்ப முடியவில்லை.

சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள் நூலில் இருந்து, ஒரு பக்கம் கடல். மற்றொரு பக்கம் முழுவதும் ராணுவம். அதுவொரு கொலைக்களக் காட்சி. இறந்த பொது மக்கள் வெள்ளைக் கொடிகளைப் பிடித்தபடி கிடந்தார்கள். மருத்துவமனையைச் சுற்றிக் குண்டுகள் விழுந்த குழிகள். அவற்றின் பின்னாலும் பனை மரங்களிடையே விழுந்து கொண்டிருக்கும் குண்டுகளின் சத்தங்கள். திக்குமுக்காட வைக்கும் பழுப்பு நிறப் புகை காற்றில் பரந்திருந்தது.

### ஊடகவியலாளரின் சாட்சியம்

முட் கம்பி அடித்த வேலிக்குள் செம்மறி ஆடுகளைப் போல் எங்களை அடைத்தார்கள். எங்களின் உடைகளை எல்லாம் கழற்ற வைத்தார்கள். வயது, பால் வித்தியாசம் இன்றி எல்லோரும், பச்சைக் குழந்தைகள் கூடத் தங்கள் உடைகளைக் களைய வேண்டும். காவல் தளத்துக்குப் பின்னால் அவளை வன்புணர்வுக்கு ஆளாக்கி இருக்க வேண்டும். காவல் தளத்துக்குப் பின்னால் அந்தச் சிறுமி அரை நிர்வாணமாக நின்று அழுவதைக் கண்டேன் “ஈழம்: சாட்சியமற்ற போரின் சாட்சியங்கள்” நூலில் பல உண்மைகளை பிரான்ஸிஸ் ஹாரிசனின் பகிர்ந்துள்ளார்.

ஒரு போர் மண்டலத்துக்குள் இருப்பது எப்படி இருக்கும் என்பதைப் புரிந்துகொள்ள அவர்கள் எனக்கு உதவினார்கள். அவை விலைமதிப்பற்றவை. தங்கள் முயற்சி வீணாகிவிட்டதே என்று வருந்தக்கூடாது. அவர்களின் பெயர்களை என்னால் கூற முடியாது. அவர் பதிவு செய்த கதைகள் அனைத்தும் இடப் பற்றாக்குறையால் இந்த நூலில் இடம்பெறவில்லை.

சிலர் தங்களின் பயங்கரமான அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொள்ள பல மணிநேரம் செலவழித்துள்ளனர். இலங்கையை விட்டு வெளியேறிய பிறகு என்னுடன் தொடர்பில் இருந்த சிங்கள, தமிழ் நண்பர்களின் உதவியின்றி என்னால் இந்த நூலை எழுதியிருக்க முடியாது.

2009 இல் கொழும்பில் நடந்த செய்தியாளர் சந்திப்புகளின் மூலம் எனக்குத் தெரிந்த பல ஊடகவியலாளர்கள் புலம்பெயர்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்களின் அனுபவத்தில் இருந்து அந்த சொர்க்கத் தீவு எவ்வளவு மாறிவிட்டது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

அவர்களுடைய உதவியுன்றி இந்தப் புத்தகத்தை எழுத நினைத்திருக்கவே மாட்டேன் என்பது நிச்சயம். பேச முடியாத உயிர் பிழைத்தவர்களைக் கண்டுபிடிக்க பலர் எனக்கு உதவியுள்ளனர். பலரது பாதுகாப்புக்காக அவர்களின் பெயர்களை என்னால் வெளியிட முடியாது என பிரான்ஸிஸ் ஹாரிசன் தமிழ் பதிப்புக்கு எழுதிய முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

# தோட்டத் தொழிலாளரது சம்பள உயர்வு; அரசின் செயற்பாடு சந்தேகம் தருகிறது!

## நுவரெலியா எம்.பி. மயில்வாகனம் உதயகுமார் தெரிவிப்பு

(தலவாக்கலை)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் தற்போதைய அரசு நடந்து கொள்ளும் விதம் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக நேற்று (9) நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கடந்த முறை சம்பள நிர்ணய சபையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகளுக்கும் இம்முறை சம்பள உயர்வு விடயத்தில் சம்பள நிர்ணய சபை நடந்து கொள்ளும் விதம் தொடர்பிலும் பாரிய பரஸ்பர வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

இம்முறை, கடந்தமுறை போன்ற நடைமுறை இன்றி நேரடியாக தொழில் ஆணையாளரால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதுவும் கடந்த மே 1 ஆம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தன்று உலகம் முழுக்க தொழிலாளர்களின் உரிமைகளையும் அந்த உரிமைகளை பெறுவதற்காக தொழிலாளர்கள் செய்த அர்ப்பணிப்புகளையும், தியாகங்களையும் நினைவு கூர்ந்து கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், மலையகத்தில் தொழிலாளர் தின கூட்டத்தில் கலந்துகொண்டு ஜனாதிபதியும், தொழில் அமைச்சரும் இந்த வர்த்தமானி அறிவித்தல் குறித்து அறிவிப்பு விடுத்தமை பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

யாரை ஏமாற்றுவதற்கு இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது என்ற கேள்வி வர்த்தமானி அறிவித்தல் வெளியானது தொடக்கம் இன்று வரை நீடித்துக் கொண்டிருக்கிறது.

விளம்பர அறிவிப்பாகவே இதனைப் பார்க்க முடிகின்றது. காரணம், அப்படியே பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசுக்கு உண்மையான கரிசனை இருந்திருந்தால் ஜனாதிபதி, ஜனாதிபதி செயலகத்தில் 1700 ரூபா வழங்க வேண்டும் என்று அறிவிப்பு கொடுத்த மறுநாள் அல்லது ஒரு வாரத்தில் சம்பள நிர்ணய சபையால் அல்லது தொழில் ஆணையாளரால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.



ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியான பின்னர் உடனே அதனை வழங்க முடியாது என்று பெருந்தோட்ட கம்பெனிகள் அறிவித்துவிட்டன. அப்படி இருக்கையில், கடந்த மூன்று நான்கு மாதங்களாக இழுத்தடிப்பு செய்து இதோ வருகிறது, அதோ வருகிறது என்று திகதிகளை மாற்றி மாற்றி அறிவித்து மக்களை ஏமாற்றித் தொழிலாளர் தினத்தில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதா ? என்ற கேள்வி பலர் மத்தியிலும் எழுந்துள்ளது.

கடந்த முறை, சம்பள நிர்ணய சபையால் ஆயிரம் ரூபா சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்ட பின்னர், சுமார் ஒரு வருடங்களின் பின்னரே அது தொழிலாளர்களுக்கு கிடைக்கப்பெற்றது. அதே நிலை, இந்த 1,700 ரூபாய் சம்பள உயர்வுக்கும் ஏற்படப் போகின்றதா ? என்ற அச்சம் இன்று எழுந்துள்ளது. காரணம், வர்த்தமானி அறிவித்தல் வெளியான பின்னர் பெருந்தோட்ட கம்பெனிகள் தாங்கள் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தொழில் திணைக்களம் தங்களுடன் கலந்துரையாடாமல் இவ்வாறான ஒரு வர்த்தமானியை வெளியிட்டிருப்பதாகவும் இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

எனவே, "பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டி விடும்" வேலை செய்யும் இந்த அரசு பெருந்தோட்ட கம்பனிகளை நீதிமன்றத்திற்கு செல்ல வழிவிட்டு விட்டு தொழிலாளர்களுக்கு வெறுமனே 1700 ரூபா என்ற வர்த்தமானியை மாத்திரம் காட்டி ஏமாற்று நாடகம் ஒன்றை அரங்கேற்றியுள்ளது.

தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு தற்போது அவர்கள் கொழுந்து பறிக்கும் தேயிலை தோட்டங்களை பிரித்துக் கொடுத்து அவர்களைச் சிறுதோட்ட உரிமையாளர்கள் ஆக்கி அதனூடாக அவர்களுக்கான வருமானத்தை பெருக்கிக் கொள்ளும் முறைமையாகும்.

இதேபோன்று இந்த பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள உயர்வு பிரச்சினைக்கு தாங்கள் முன்வைக்கும் நிரந்தர தீர்வு என்ன ? என்பதை இந்த அரசும் – அரசில் அங்கம் வகிப்பவர்களும் தெளிவாக அறிவிக்க வேண்டும். மாறாக பொய்களைக் கூறி நாடகங்களை அரங்கேற்றி பெருந்தோட்ட தொழிலாளர்களை தொடர்ந்து ஏமாற்றக்கூடாது என கேட்டுக்கொள்கிறேன்.

சர்வதேச தொழிலாளர் தினத்தன்று இந்த அரசாங்கத்தால் மலையகத்தில் வெளியிடப்பட்ட படம் மக்களுக்கு ஏமாற்றம் அளித்து, படுதோல்வி அடைந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசும் பெருந்தோட்ட கம்பெனிகளும் முன்னெடுக்கும் கூட்டு சதிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதற்கு ஒரே வழி, ஒரே தீர்வு இறுதியான, உறுதியான, நிரந்தர தீர்வு பெருந்தோட்ட தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்கள் ஆக்குவதேயாகும்.

இதன்மூலம் உற்பத்தி அதிகரித்து ஏற்றுமதி அதிகரிக்கும். அதன் மூலம் அன்னிய செலவாணி உயர்ந்து பொருளாதாரம்மேம்படும்.அத்துடன் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் அதிகரித்து, வாழ்க்கை தரமும் உயரும். இதுவே, அவர்கள் 200 வருடங்களாக நாட்டுக்கு செய்த சேவைக்கும், அர்ப்பணிப்புக்கு கிடைக்கும் கௌரவமாக இருக்கும்.– என்றார்.





# கிழக்கு மாகாணக் கல்வி பணிப்பாளர் கல்முனைக்கு

**(எம் எப்.நவாஸ்)**

கல்முனைக் கல்வி வலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் அடைவு மட்டத்தினை அதிகரிக்கும் நோக்குடன் நடத்தப்பட்ட வலய மட்டத்திலான பரீட்சை தொடர்பாக சாய்ந்தமருது, நிந்தவூர் மற்றும் காரைதீவு கோட்ட அதிபர், ஆசிரியர்களுக்கான மீளாய்வுக் கூட்டம் நேற்று (09) வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ளு.சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.குலேந்திரகுமார் கலந்து கொண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பான அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு மாகாண மட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிடப் பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக விளக்கிக் கூறினார்.

இக்கூட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், வளவாளர்கள், அதிபர்கள், பிரதி, உதவி அதிபர்கள் , தரம் 5 வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வரங்கு ஒத்திவைப்பு

**(எம். எப். நவாஸ் )**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பத்தாவது சர்வதேச ஆய்வரங்கானது ஒத்திவைக் கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

எனினும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் அனைத்து பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்களின் தொடர் வேலை நிறுத்த போராட்டம் காரணமாகக் குறித்த சர்வதேச ஆய்வரங்கைத் திட்டமிட்ட திகதியன்று நடாத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதால் குறித்த ஆய்வரங்கானது மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது.

இருப்பினும் கல்வி சாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்ததன் பின் ஆய்வரங்கு நடைபெறும் புதிய திகதி அறிவிக்கப்படும் .

# பாராட்டி வாழ்த்துத் தெரிவிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய ஏ.ஜி.ஏ. ஜாபிர் தனது 28 வருடகால முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (சிறாப்பர்) சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

இவர் 1996.12. 02 ஆம் திகதி அம்பாறை மாவட்ட செயலகத்தில் சிறாப்பராக முதல் நியமனம் பெற்று 12 ஆண்டுகள் கடமையாற்றி அதன் பின்னர் 2008.01.01 ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்று அதனை தொடர்ந்து சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய பின்னர் 2017.01.01 ஆந் திகதி முதல் மீண்டும் சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக (சிறாப்பராக) கடமையாற்றி வந்த நிலையில் தனது 28 வருடகால சேவையின் பின்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவரின் 28 வருட அரச சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக நலன்புரி



அமைப்பின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதில் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளைகளின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# கல்வி சாரா ஊழியர்களின் நியாயமான தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவு!

## தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலாளர் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

சம்பள உயர்வு மற்றும் ஏனைய வாழ்வாதாரக் கோரிக்கைகளை வலியுறுத்தி 8 ஆவது நாளாகவும் நடைபெற்று வரும் தொடர்ச்சியான வேலை நிறுத்த போராட்டங்களால் பல்கலைக் கழகத்தில் கல்வி மற்றும் ஏனைய ஆய்வு கூட செயல்பாடுகள் முடக்கப்பட்ட நிலையில் பல்கலைக்கழக மாணவர் சமூகம் மிகுந்த பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ளது.

இருந்த போதிலும் கடந்த எட்டு வருடங்களாக அரசால் வாக்களிக் கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருக்கும் கல்வி சாரா உத்தியோகத்தர்களில் சம்பள முரண்பாடு மற்றும் ஏனைய மாதாந்த படி அதிகரிப்பு போன்ற விடயங்கள் உடன் தீர்க்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக சூழலை வினைத் திறன் மிக்க சூழலாக மாற்றிக் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளுக்குப் பக்க பலமாக தொழில்படுகின்ற கல்வி சாரா உத்யோத்தர்களின் நீண்டகால குறை



பாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

அரசு இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்து இந்த விடயங்களை தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் எம்.ஏ.ஏ.எம். சமீம் இவ்வாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களை பொறுத் தமட்டில் கல்வி சாரா ஆளனியினர் பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் தொடங்கி ஏனைய கல்வி சார்ந்த நடவடிக்கைகளுக்கு பக்க பலமாகவும் பல்கலைக்கழகத்தின் உயர்வுகளுக்கும் அதன் வினைத்திறன் மிக்க சேவைகளுக்கும் மாணவர்கள் தொடக்கம் ஆசிரிய சமூகம் வரை தங்களது அயராத பங்களிப்புகளை வழங்கி வருகின்றன.

இந்த வேளையில் ஏனைய அரச துறை ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்புகள் இதுவரை காலமும் மறுக்கப்பட்ட நிலையில் அவர்களது கோரிக்கையை முன்னிறுத்தி கடந்து எட்டு வருடங்களாக மேற் கொள்ளப்படுகின்ற தொடர்ச்சியான போராட்டம் அரசின் உயர்மட்டங்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு உடனடியாக அவர்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டும்.

இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏகோபித்த தீர்மானத்தை வழிமொழிந்தவராக அரசு இவ்விடத்தில் உடன் கரிசனை காட்ட வேண்டும் என்று சமீம் மேலும் குறிப்பிட்டார்.



# அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி பயிற்சி நெறி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி நவரஞ்சினி முகுந்தன் (காணி) தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை (10) ஆரம்பமாகியது.

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் இரண்டாம் மொழி பயிற்சி நெறி நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த மேலதிக அரச அதிபர், சிங்கள மொழியை கற்று தேர்ச்சி பெற்று சிறந்த தொடர்பாடலை மேற்கொண்டு சேவையை வழங்க வேண்டும் என்றார்.

உத்தியோகத்தர்களின் இரண்டாம் மொழியாற்றலை அதிகரிப்பதுடன் அலுவலகக் கடமையில் ஈடுபடும் போது தொடர்பாடலை மேம்படுத்துவதாக இந்தக் கற்கை நெறி அமையவுள்ளது.

150 மணித்தியாலங்களை உள்ளடக்கிய இந்தக் கற்கை



நெறியை அரச திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் ஆர்வமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இக் கற்கை நெறியை அரச கரும மொழிகள் திணைக் களத்தின் வளவாளர் கே.மதிசூதனன் மேற்கொள் கிறார்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணன், அரச கரும மொழிகள் திணைக்கள இரண்டாம் மொழி கற்கையின் இணைப்பாளர் என்.விஜயதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நடிகர் விஜய்யின் கட்சியின் முதல் மாநாடு அவர் பிறந்தநாளில் மதுரையில் நடக்கும்!

## ஜூன் 22 ஆம் திகதி நடத்த பிரமாண்டமான ஒழுங்கு



சென்னை,மே 10

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

விஜய் கடந்த பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற கட்சியைத் தொடங்கினார். தேர்தல் ஆணையம் அங்கீகாரம் வழங்கியதும் கட்சியின் கொடி, சின்னம் அறிவிக்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார். தேர்தல் ஆணையத்திலும் தனது கட்சியைப் பதிவு செய்துள்ள விஜய் வரும் 2026 சட்டமன்ற தேர்தல்தான் இலக்கு என அறிவித்தார்.

இந்த மக்களவைத் தேர்தலில், தான் போட்டியிடப் போவதில்லை எனவும் யாருக்கும் ஆதரவு கொடுக்க மாட்டோம் எனவும் கூறினார். இடைப்பட்ட இந்த 2 வருடங்களில் கட்சியைப் பலப்படுத்தும் பணிகளில் ஈடுபடப் போகிறார் எனவுன் அவர் கூறினார்.

இந்நிலையில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு குறித்த தகவல் வெளியாகியுள்ளது. நடிகர் விஜய் அடுத்த மாதம் 22 ஆம் திகதி தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். பிறந்தநாளையொட்டி மதுரையில் தனது கட்சி சார்பில் முதல் பிரமாண்டமான மாநாடு நடத்த விஜய் திட்டமிட்டுள்ளார் எனஜ் கூறப்படுகிறது. இந்த மாநாட்டுக்கு தமிழகம் முழுவதிலும் இருந்து விஜய்யின் ஒட்டு மொத்த ரசிகர்களும் திரண்டு வந்து கலந்து கொள்ள இருக்கின்றனர் எனவும் தெரிகிறது.





# டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலுக்கு இடைக்காலப் பிணை அனுமதி!

## உச்ச நீதிமன்றம் இன்று வழங்கியது

புதுடெல்லி,மே 10

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால பிணை அனுமதி வழங்கி இந்திய உச்சநீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

டெல்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கடந்த மார்ச் 21 ஆம் திகதி டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டார். அவர் டெல்லி திகார் சிறையில் நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டுள்ளார். அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டமையை எதிர்த்து டெல்லி உயர்நீதி மன்றத்தில் அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்திருந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து அமலாக்கத் துறையின் கைது நடவடிக்கையை எதிர்த்தும், இடைக்காலப் பிணை கோரியும் உச்சநீதிமன்றத்திக் கெஜ்ரிவால் மேன்முறையீடு செய்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, திபங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நிலுவையில் உள்ளது. தேர்தல் பிரசாரம் செய்வதற்காக அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால பிணை அளிப்பது பற்றி 10 ஆம் திகதி (இன்று) தீர்ப்பு அளிப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்காலப் பிணை அனுமதி வழங்கி உச்சநீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. அடுத்த மாதம்(ஜூன்) முதலாம் திகதி வரை அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்காலப் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரவிந்த் கெஜ்ரிவால் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடலான், முதலமைச்சரின் அலுவல் பணிகளில் ஈடுபடக் கூடாது எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஜூன் 2ஆம் திகதி சரணடைய வேண்டும் எனவும் கெஜ்ரிவாலுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ‘இந்தியத் தேர்தலில் தலையிடவில்லை’ ரஷ்யக் குற்றச்சாட்டுக்கு அமெ. மறுப்பு!





வொஷிங்டன்,மே 10

நாங்கள் இந்திய மக்களவைத் தேர்தலில் தலையிடவில்லை என்று அமெரிக்க செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசின் கீழ் இயங்கும் சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம் என்ற அமைப்பு அண்மையில் தாக்கல் செய்த அறிக்கையில், இந்தியா உள்ளிட்ட 11 நாடுகளில் மத சுதந்திரத்தின் நிலையை கண்காணிக்க வேண்டும் எனக் கூறியிருந்தது.

இந்த பட்டியலில் இந்தியா 5 ஆவது இடத்தில் இருந்தது. இதனை நிராகரித்த மத்திய அரசு, இந்தியாவின் தேர்தல் நடவடிக்கையில் மேற்படி அமெரிக்க அமைப்பு தலையிட முயற்சி செய்வதாக பதில் அளித்து இருந்தது.

இந்த நிலையில், ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகள் மூலம் நாடாளுமன்ற தேர்தலில் ஸ்திரமற்ற இந்தியாவை உருவாக்க அமெரிக்கா முயற்சி செய்கிறது என ரஷ்யா குற்றம்சாட்டி உள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மரியா ஜகாரோவா கூறியிருப்பதாவது:-

“இந்தியாவின் மத சுதந்திரம் குறித்து ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அமெரிக்கா கூறி வருகிறது. இந்தியாவில் உள்நாட்டு அரசியல் சூழ்நிலையை சமநிலைப்படுத்தாமல் தேர்தலை சிக்கலாக்குவதே அமெரிக்காவின் நோக்கமாக உள்ளது. இந்திய உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை அந்நாட்டின் அறிக்கை தெளிவாக எடுத்துக்காட்டி உள்ளது” – என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இந்தியாவில் நடைபெற்று வரும் நாடாளுமன்ற தேர்தலில் அமெரிக்கா தலையிடுவதாக ரஷ்யா முன்வைத்த குற்றச்சாட்டுகளை அமெரிக்கா மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க செய்தித் தொடர்பாளர் மேத்யூ மில்லர், “நிச்சயமாக இல்லை. நாங்கள் இந்திய மக்களவை தேர்தலில் தலையிடவில்லை. அது இந்திய மக்கள் எடுக்க வேண்டிய முடிவு. இந்தியா மட்டுமல்ல, உலகின் எந்த நாட்டு தேர்தல் விவகாரத்திலும் நாங்கள் தலையிடுவதில்லை” என்றார்.

காலிஸ்தான் தீவிரவாதி குர்பத்வந்த் சிங் பன்னுன் கொலை முயற்சியில் இந்தியர்களுக்குத் தொடர்பு உள்ளதாக அமெரிக்கா கூறிய குற்றச்சாட்டு தவறானது என்றும் இதற்காக எந்த நம்பத்தகுந்த ஆதாரத்தையும் இதுவரை அமெரிக்கா வழங்கவில்லை என்றும் ரஷ்யா முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்த மில்லர், “நிரூபிக்கப்படும் வரை அவை குற்றச்சாட்டுகளே. அது தொடர்பான குற்றபத்திரிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. யார் வேண்டுமானாலும் சென்று அதனை படித்து கொள்ளலாம். இந்த விவகாரம் நீதிமன்றத்தில் இருப்பதால் அதுகுறித்து நான் எதுவும் பேசமுடியாது” என்று தெரிவித்தார்.

# காலக்கெடுவுக்கு முன்பே இந்திய வீரர்கள் மாலைதீவில் இருந்து வெளியேறிவிட்டனர்

மாலே,மே 19

மாலைதீவில் நிலைகொண்டிருந்த இந்திய வீரர்கள் காலக்கெடுவுக்கு முன்பே அங்கிருந்து வெளியேறிவிட்டனர்.

மாலைதீவின் தீவுக் கூடங்களுக்கு இடையில் நோயாளர் அம்புலன்ஸ் சேவையை நடத்துவதற்காக இந்தியா பரிசளித்த இரண்டு ஹெலிக்கொப்டர்கள் மற்றும் டோர்னியர் விமானங்களை இயக்கவும், பராமரிக்கவும் இந்திய இராணுவ வீரர்கள் மாலைதீவில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

மாலைதீவில் கடந்த ஆண்டு நடைபெற்ற அதிபர் தேர்தலில் சீன ஆதரவாளராக அறியப்படும் முகமது முய்சு வெற்றி பெற்றார். மாலத்தீவு அதிபராக பதவியேற்றது முதல் முகமது முய்சு, இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கடைபிடித்து வருகிறார். தேர்தல் பிரசாரத்தின் போதே, மாலை



தீவில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்தியிராணுவ வீரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், கடந்த ஜனவரி மாதம் பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணத்தை மாலைதீவு மந்திரிகள் சிலர் இனவெறியுடன் விமர்சித்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இரு நாடுகளுக்கும் இடையேயான உறவிலும் விரிசலை அதிகப்படுத்தியது. இத்தகைய சூழலில், மாலத்தீவில் முகாமிட்டுள்ள இந்தியிராணுவ வீரர்கள் மே 10 இற்குள் வெளியேற வேண்டும் என்று முகமது முய்சு கெடு விதித்து இருந்தார்.

இந்த நிலையில், கெடு முடியும் முன்பே மாலைதீவில் நிலை நிறுத்தப்பட்டு இருந்த இந்திய இராணுவப் படைகள் முற்றிலுமாக வெளியேற்றிவிட்டன என அதிபர் முகமது முய்சுவின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். மாலைதீவில் நிலை நிறுத்தப்பட்டிருந்த கடைசிக் கட்ட இந்திய இராணுவ வீரர்கள் வெளியேற்றப்பட்டனர் என அதிபர் மாளிகையின் தலைமை செய்தித் தொடர்பாளர் ஹீனா வலீத் தெரிவித்துள்ளார். இருப்பினும், எத்தனை வீரர்கள் கடைசிக் கட்டமாக வெளியேறினார்கள் என்பது குறித்த தகவலை அவர் வெளியிடவில்லை. மாலைதீவில் நிறுத்தப்பட்டு இருந்த வீரர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பின்னர் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

கனடா முரசு

பக்கங்கள் - 4

வெள்ளிக்கிழமை 10/05/2024

## ‘எயார் கனடா’ மீது பயணிகள் அதிருப்தி

எயார் கனடா விமான சேவை நிறுவனம் தொடர்பில் வாடிக்கை யாளர்கள் அதிருப்தி வெளி யிட்டுள்ளனர். C2 ▶



# கனேடிய உரிமை சுதந்திரப் பட்டயம் பற்றிய எதிர்க்கட்சித் தலைவரின் கருத்தால் சர்ச்சை

**ஒன்ராரியோ, மே 10**

**கனேடிய உரிமை சுதந்திரப் பட்டயத்தின் மீச் செல் பிரிவை கட்டுப்பாட்டு நீக்கம் செய்யப்போவ தாக தெரிவிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலியேவின் கருத்து கவலையை ஏற்படுத்துவ தாக பூர்வீகக்குடிகள் நலன்பேண் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கெரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.**

**எந்தவொரு விடயத்தில் இவ்வாறான கட்டுப் பாட்டு நீக்கம் என்பது பொருத்தமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.**

**நியூபிரன்ஸ்விக் மற்றும் சசகெச்சுவானில் சிறு பான்மை உரிமைகளை இல்லாது செய்வதற்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதனை ஓர் உதாரணமாக அமைச்சர் சுட்டிக்காட்டி னார்.**

கனடாவின் மத்திய அரசாங்கம் தமது வரலாற்றில் ஒருபோதும் இத னைச் செய்ததில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஏதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலி- யேவின் இத்தகைய செயற்பாடு மக்க ளின் வாழ்க்கையில், அடையாளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தப் பயன்படுத் தலாம் என அவர் கவலை வெளி யிட்டுள்ளார்.

எதிரக்கட்சித் தலைவரின் கருத்து தொடர்பில் எதிர்ப்பினைத் தெரிவிக்கும் வகையில், அமைச்சர்கள் மார்சி இயன், மார்க் ஹொலன்ட், மேரி க்ளோட் பிபியு, பெட்டி ஹட்ஜ், நாடாளுமன்றச் செயலாளர் ஜேம்ஸ் மெலோனி ஆகி யோர் ஊடகத்திடம் கருத்து தெரி வித்திருந்தனர்.

## கேரளப் பெண் கனடாவில் சடலமாகக் காணப்பட்டார்





கனடாவில் தன் கணவருடன் வாழ்ந்துவந்த கேரளப் பெண்ணொருவர் சடலமாகக் கண்டெடுக்கப் பட்டுள்ளார்.

இந்தியாவின் கேரள மாநிலத்தைச் சேர்ந்த படிகலா சாஜன் மற்றும் புளோரா தம்பதியின் மகள் டோனா சாஜா (வயது 34). தன் கணவரான லால் கே. பவுலஸ் டன் கனடாவில் வாழ்ந்துவந்த டோனா, நேற்று முன் தினம் தன் வீட்டில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

அவர்கள் இருவரும் எட்டு வருடங்களாக கனடா வில் கணக்காளர்களாகப் பணியாற்றி வருகின்ற னர். C2 ▶

## பொது அமைப்பில் பணி புரிந்தபோது 700,000 டொலர் சுருட்டியவர் கைது!





றொறன்ரோவின் தொண்டு நிறுவனமொன்றில் 700000 டொலர் மோசடி செய்ததாக நபர் ஒருவர் மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

போலியான பற்றுச் சீட்டுக்கள் மற்றும் விலைப்பட்டியல்களை பயன்படுத்தி இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 2023ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் இந்த மோசடி இடம் பெற்றுள்ளது.

போலி ஆவணங்களை தயாரித்து போலி வங்கிக் கணக்கு களைப் பயன்படுத்தி மோசடி செய்யப்பட்டுள்ளது. C2 ▶




# கொலைகாரக் கும்பல்கள் பற்றி விசாரணை செய்ய சிறப்புக் குழு

## பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில்

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 10

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணமானது கொலைக் குற்றங்களில் ஈடுபடும் குழுக்கள் தொடர்பில் சிறப்பு விசாரணைக் குழு ஒன்றை உருவாக்கியுள்ளது.

இப்போது மாகாணத்தில் நடக்கும் கொலைகளில் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் கும்பல் கொலைகள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2003 இல் மாகாணத்தில் நடந்த மொத்தக் கொலைகளில் கும்பல் தொடர்பான கொலைகள் 21 சதவீதத்திலிருந்து கடந்த ஆண்டு 46 சதவீதமாக உயர்ந்துள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சகத்தின் தரவு கூறுகிறது.

மாகாணத்தின் பொதுப் பாதுகாப்பு அமைச்சரும் சொலிசிட்டர் ஜெனரலுமான மைக் ஃபார்ன்வொர்த், இந்த புதிய பிரிவானது கொலைக் குழுவுடன் தொடர்புடைய கொலைகளை விசாரிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

18 பேர் கொண்ட இந்த குழு ஆண்டின் பிற்பகுதியில் அல்லது 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முழுமையாக செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# மார்பகப் புற்று நோய்ப் பரிசோதனை 40 வயதுக்கு மேல் இனிக் கட்டாயம்


கனடாவில் மார்பகப் புற்று நோய் தொடர்பில் விசேட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கனடாவின் அனைத்து மாகாணங்களும் பிராந்தியங்களும் மார்பகப் புற்று நோய் குறித்த பரிசோதனைகளை 40 வயதிலிருந்து மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கனடிய புற்று நோய் அமைப்பு இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளது. சில மாகாணங்களில் 40 வயதிற்கு மேற்பட்டவர்களிடமிருந்து மமாகிராம்ஸ் பரிசோதனை நடத்தப்படுகின்றன.

தற்பொழுது அநேகமான பகுதியில் 50 வயதுக்கும் மேற்பட்டவர்களிடம் மார்கப் புற்று நோய் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

நாடு முழுவதிலும் உள்ள பெண்கள் மார்கப் புற்று நோய் பரிசோதனை செய்து கொள்ள சமசந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



### பொது அமைப்பில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நபர் குறித்த தொண்டு நிறுவனத்தின் பணத்தைப் பயன்படுத்தி ரசீதுகளுக்கான கொடுப்பனவுகளை செய்துள்ளார்.

ரிச்மன்ட் ஹில் பகுதியைச் சேர்ந்த 36 வயதான அப்பாஸ் அலி என்பவரே நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

அவர் மீது 5,000 டொலருக்கு மேல் மோசடி செய்ததார் என இரண்டு சார்த்தல்கள், 5,000 டொலருக்கு மேல் குற்றத்தின் மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் இரண்டு, 5,000 டொலருக்கு மேல் குற்றத்தின் மூலம் பெறப்பட்ட இரண்டு கணக்குகள், ஒரு போலி ஆவணம், ஒரு கணக்கு ஆகியவை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

### 'எயார் கனடா'

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வட அமெரிக்காவில் இயங்கி வரும் விமான சேவை நிறுவனங்களில் மிகவும் மோசமான விமான சேவை நிறுவனங்களில் ஒன்றாக எயார் கனடா அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் திருப்தி அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள தரவரிசையில் எயார் கனடா விமான சேவை நிறுவனம் பின்னிலை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தக வகுப்பு, முதனிலை பெருளாதார வகுப்பு சேவைகளின் தரம் குறித்து வாடிக்கையாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

### கேரளப் பெண்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு திருமணமாகி மூன்று ஆண்டுகள் ஆகிறது. நேற்று முன்தினம், அவர்கள் வாழ்ந்துவந்த வீடு பூட்டிக் கிடப்பதை கண்டு அக்கம் பக்கத்தினர் பொலிஸாருக்குத் தகவலளித்துள்ளனர். வீட்டுக்குள் நுழைந்த பொலிஸார் டோனா இறந்து கிடப்பதைக் கண்டுள்ளனர்.

இதற்கிடையில், டோனாவின் கணவரான லாலைக் காணவில்லை. ஆகவே, அவரைத் தேடும் முயற்சியில் பொலிஸார் இறங்கியுள்ளார்கள்.






# டொரன்டோவில் தங்கக் குவியல் அபகரிப்பு: இந்தியாவிலிருந்து வந்திறங்கியவர் கைது!

ஒன்ராரியோ, மே 10

டொரன்டோவின் பியர்சன் விமான நிலையத்தில் தங்கம் சூறையாடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாரினால் மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிறம்டன் நகரை சேர்ந்த 36 வயதான ஆர்கிட் குரோவர் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளமையை பொலிஸார் உறுதிசெய்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து டொரன்டோவிற்கு விமானம் மூலம் வந்தடைந்த அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு கனடாவின் பிரதான சர்வேதச விமான நிலையமான பியர்சன் விமான நிலையத்தில் தங்கம் சூறையாடப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த ஒன்பது சந்தேக நபர்கள் புலனாய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

கனடிய வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரியளவில் தங்கச் சூறையாடப்பட்ட இந்த 22.5 மில்லியன் டொலர் தங்க அபகரிப்பை பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களில் பிறம்டனைச் சேர்ந்த தமிழர் ஒருவரும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி எயார் கனடாவில் இருந்து சுமார் 20 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள 6,600 தங்கக் கட்டிகள், சுமார் 2.5 மில்லியன் டொலர்கள் மதிப்பிலான வெளிநாட்டு பணம் என்பன விமானநிலையத்தில் தவறான பிரகடனம் மூலம் அபகரித்துச் செல்லப்பட்டன.

# இயற்கை பேரிடர்களைச் எதிர்கொள்ள தேசிய மட்டத்தில் அவசரகால அமைப்பு

## அவசியம் என்கின்றனர் வடக்கு முதல்வர்கள்



நுனாவட், மே 10

இயற்கை பேரழிவுகளைச் சமாளிக்க தேசிய அவசரகால பதிலளிப்பு அமைப்புக்கு வடக்கு முதல்வர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

பாண்ட் இன்லெட், நுனாவட்டில் இந்த வாரம் ஒரு கூட்டத்திற்குப் பிறகு, சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்ட காட்டுத் தீ மற்றும் வெள்ளம் என்பன மத்திய அரசாங்கத்தின் தலையீட்டின் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன என முதல்வர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமேற்கு பிரதேசங்களின் முதல்வர் ஆர்.ஜே. சிம்ப்சன், அத்தகைய நிறுவனம் இல்லாத சில ஜி7 நாடுகளில் கனடாவும் ஒன்று எனத் தெரிவித்துள்ளார்.

காட்டுத்தீ அல்லது வெள்ளம் தங்கள் சமூகங்களை அச்சுறுத்தும் போது தாங்கள் எவ்வாறு இணைந்து செயல்படுவது என்பது பற்றி நகராட்சி மற்றும் முதல் நாடுகளின் தலைவர்கள் ஏற்கனவே பேசி வருகின்றனர் என யுகோன் முதல்வர் ரஞ்ச் பிள்ளை கூறியுள்ளார்.

# மாற்றுப் பாலின ஆதரவுக் குழுக்களுக்கு மத்திய அரசின் 1.7 மில்லியன் டொலர்கள்



ஒன்ராரியோ, மே 10

வெளிநாட்டில் உள்ள மாற்றுப் பாலின மற்றும் பாலியல் சிறுபான்மையினரை ஆதரிக்கும் குழுக்களுக்கு மத்திய அரசு 1.7 மில்லியன் டொலர்களை அறிவித்துள்ளது,

எவ்வாறாயினும் LGBTQ+ இனருக்கான வாக்குறுதிகளை பின்பற்றுவதில் மத்திய அரசாங்கத்தின் நிதியொதுக்கீடு மெதுவாக உள்ளதாக ஆர்வலர்கள் விமர்சனத்தை வெளியிட்டுள்ளனர்.

'LGBTQ+ உரிமைகளை எதிர்க்கும் குழுக்கள் பெருகிய முறையில் நல்ல நிதியுதவி மற்றும் உலக அளவிலான ஒருங்கிணைப்பைக் கொண்டுள்ளன என்பதை நாங்கள் அறிவோம்' என்று சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அஹ்மத் ஹுசனின் நாடாளுமன்ற செயலாளரான ஆளும் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனிதா வாண்டன்பெல்ட் கூறினார்.

நேபாளம், தாய்லாந்து மற்றும் டொமினிக்கன் குடியரசில் சிறுபான்மையினரின் சமீபத்திய முன்னேற்றத்திற்கு இந்த மக்கள் உதவியுள்ளனர் என்று கூறி, அகதி அந்தஸ்து பெறுவதற்குப் பதிலாக பெரும் ஆபத்தில் தங்கள் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடியதற்காக ஆர்வலர்களை அவர் பாராட்டினார்.

வெளிநாட்டில் உள்ள LGBTQ+ நபர்களை ஆதரிக்கும் கனடிய குழுக்களின் கூட்டணியான டிக்னிட்டி நெட்வேர்க்கின் மாநாட்டில் மே 9ஆம் திகதி வாண்டன்பெல்ட் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

# முதலீட்டு ஆதாய வரிவிதிப்பினால் ஐந்தில் ஒரு கனடியருக்குப் பாதிப்பு

## நிதியமைச்சரிடம் வணிகக் குழுக்கள் தெரிவிப்பு



ஒன்ராரியோ, மே 10

முதலீட்டு ஆதாய வரிவிதிப்பில் மத்திய அரசின் முன்மொழியப்பட்ட மாற்றங்களால் ஐந்தில் ஒரு கனடியர் பாதிக்கப்படுவார்கள் என்று வணிகக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

மே 9ஆம் திகதியன்று நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்டிற்கு அனுப்பிய கடிதத்தில், கனேடிய வர்த்தக சம்மேளனம் மற்றும் பிற குழுக்கள், பணக்கார கனேடியர்கள் மட்டுமே பாதிக்கப்படுவார்கள் என்ற அரசாங்கத்தின் கூற்று தவறானது என்று சுட்டிக் காட்டியுள்ளது.

'உண்மையில், ஐந்து கனடியர்களில் ஒருவர் அடுத்த 10 ஆண்டுகளில் நேரடியாக பாதிக்கப்படுவார். மேலும் இந்த வரி உயர்வின் விளைவுகள் அனைத்து கனடியர்களாலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுமக்கப்படும்' என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# விபத்தில் ஏழு வயது உக்ரேனிய அகதிச் சிறுமியை இடித்துக் கொன்ற சாரதி மன்னிப்புக் கோருகிறார்




கியூபெக், மே 10

2022 ஆம் ஆண்டில் ஏழு வயது உக்ரேனிய அகதியைத் இடித்துக் கொன்ற ஓட்டுநர், விபத்திற்குப் பிறகு நிறுத்தத் தவறியமைக்கான குற்றத்தை ஒப்புக்கொண்ட பின்னர் சிறுமியின் குடும்பத்தினரிடம் மே 9ஆம் திகதி உணர்ச்சிவசப்பட்டு மன்னிப்பு கேட்டுள்ளார்.

நீல நிற உடை அணிந்து, ஸ்பானிய மொழியில் மென்மையாகப் பேசிய ஜுவான் மானுவல் பெசெர்ரா கார்சியா, மரியா லெஜென்கோவ்ஸ்காவின் குடும்பத்தாருக்கு அவர் ஏற்படுத்திய வலிகள் என்றென்றும் தன்னுடன் இருக்கும் என்று கூறியுள்ளார்.

'உங்கள் மகளின் நினைவை என்னுடன் எடுத்துச் செல்லவும், அவளுடைய வாழ்க்கையை மதிக்கவும் நான் உறுதியளிக்கிறேன்' என்று 46 வயதான அவர் நீதிமன்ற அறையில் பிரெஞ்சு மற்றும் உக்ரேனிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட உரையில் கூறினார்.

'காலப்போக்கில் உங்களுக்கு மன்னிக்கும் வல்லமைக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்.' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலம், அவர் அபாயகரமான தாக்குதலுக்கான குற்றத்தை ஒப்புக்கொள்ள விரும்புகின்றார் என உறுதிப்படுத்தினார்.

ஏழு வயது மரியா தனது சகோதரர் மற்றும் சகோதரியுடன் டிசம்பர் 13, 2022 அன்று பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது, பெசெரா கார்சியாவின் ஜீப் அவள் மீது மோதியது.

அவர் நிறுத்தாமல் அந்த இடத்தை விட்டு ஓட்டிச் சென்றார். ஆனால் அன்றைய தினம் மாலை அவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார்.